# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 144/17 — 1975 ජනවාරි 03 වැනි සිකුරාදා — 1975.01.03

144/17 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு சனவரி மாதம் 03 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல.:- சி. 555 — கோதுமை மா

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

4 ம் பிரிவின் கீழான கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவும் நானாவிதப் பொருட்களும்) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு (உணவும் நானாவிதப் பொருட்களும்) விலைக் கட்டுப்பாட்டதிகாரி வில்பிரட் ஜயசூரிய ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1974 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 01 ம் திகதி வெளியான 122/35 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1974 ஒகஸ்ட மாதம் 1 ந் திகதியைக் கொண்ட சி 544 ம் இலக்கக் கட்டளையை 1975 சனவரி மாதம் 01 தொடக்கம் நீக்கிவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இறுத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்கலாகாதெனவும், 01.01.1975 தொடக்கம் நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன் ;

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு நிகர அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுபாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, “ இறுத்தல் ” அல்லது “ இறு. ” என்பது அவோர்டுபோல் எடுத்தலளவை முறையின் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால், ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ;

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம் 3 ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

வில்பிரட் ஜயசூரிய,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவிதப் பொருட்களும்).

1975 ம் ஆண்டு சனவரி மாதம் 01 திகதியன்று பி.ப. 4 மணிக்குக் கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| விபரம் | நிகர நிறை ஒரு அந்தர் (112 இருத்தல்) கோதுமை மாவின் உச்ச மொத்த விலை | ஒரு நிகர இருத்த லின் உச்ச சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| (i) கோதுமை மா (பங்கீட்டில்) .. .. .. .. | 117 72 .. | 1 10 |
| (ii) கோதுமை மா (பங்கீடில்லாமல்) .. .. .. .. | 122 04 .. | 1 10 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென நியமிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை உச்ச விலைகளாகும். இவ்விலைகளுக்குமேல் விற்பனை நடைபெறலாகாது.

1–404

---

உணவு விலைக்கட்டளை இல. சி. 556.

உப உணவுப் பொருட்கள்—கொத்தமல்லி

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

4 ம் பிரிவின் கீழான கட்டளை

22

173 ம் அத்தியாயமான விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவும் நானுவிதப் பொருட்களும்) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு (உணவும் நானுவிதப் பொருட்களும்) விலைக்கட்டுப்பாட்டதிகாரி வில்பிறட் ஜயசூரிய ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1974 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் தேதி வெளியான 121/9 ம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிசேட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1974 ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ம் தேதியைக் கொண்ட சி. 543 ம் இலக்க உணவுக் விலைக்கட்டளையை உடனடியாக ரத்துச்செய்கின்றேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரிஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் விற்கலாகாதெனவும்,உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன் ;

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகை விற்றல்யில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத் தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாக்வே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது,வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில்,தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றுக்ப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2ம், 3 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1975 ம் ஆண்டு சனவரி மாதம் 2 திகதி பி. ப., 3.30 மணிக்கு கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

வில்பிறட் ஜயசூரிய,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவிதப் பொருட்களும்).

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| விபரம் | மொத்த வியாபாரி ஒருவர் அந்த சில்லறை வியாபாரி ஒருவரொன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை | இறுத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| கொத்தமல்லி .. .. | 100 0 .. | 1 10 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல; இவை இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்கப்படலாகாத ஆகக்கூடிய விலைகளாகும்.

1–410

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.